கல்வி அமைச்சு தொழில்நுட்பப்பிரிவு
மனைப்பொருளியல் 85
க.பொ.த (சா.தரம்) மாதிரி வினாத்தாள் 2026

நேரம்-3 மணித்தியாலம்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

பகுதி - 1

கவனிக்க:

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
- புள்ளடித்தாளின் பின்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்துப் பின்பற்றவும்.
- இலக்கம் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு 1, 2, 3, 4 ஆகிய விடைகளிலிருந்து மிகவும் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. தானிய உணவுகள் **மட்டும்** உள்ளடங்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) அரிசி, கௌபி, சோளம் (2) சோளம், அரிசி, தினை
   (3) கௌபி, பயறு, அரிசி (4) பயறு, கௌபி, பருப்பு

2. நிரம்பிய கொழுப்பமிலம் கொண்ட உணவானது,
   (1) தேங்காய் (2) எள் (3) நிலக்கடலை (4) சோயா

3. கீழ் வரும் விடயங்களைக் கருத்திற் கொள்க.
   - இரும்பு அகத்துறிஞ்சலுக்கு உதவும்.
   - புதிய பழங்களில் காணப்படும்.
   - ஓட்சியேற்ற எதிரியாக தொழிற்படும்.

   இவ் விடயங்கள் தொடர்பான விற்றமின் யாது?
   (1) விற்றமின் A (2) விற்றமின் B_{12} (3) விற்றமின் C (4) விற்றமின் E

4. உணவை ஆயத்தப்படுத்தும் போது பரவல், புறப்பிரசாரணத்தின் போது கையாளும் நுட்பமுறையானது,
   (1) கலத்தல் (2) புரட்டுதல் (3) அடித்தல் (4) பதப்படுத்தல்

5. உணவு சமைத்தலின் போது பின்பற்றப்படும் விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன
   - தேவையான அளவு நீர் அல்லது திரவத்தைச் சேர்த்தல்
   - 65 – 80°C வரையிலான வெப்பநிலை
   - பாத்திரத்தை மூடி நீண்டநேரம் சமைத்தல்
   - உணவுத்துண்டுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு சமைத்தல்

   மேலே தரப்பட்ட தகவல்களின் படி சமையல் முறையானது,
   (1) நீரினுள் இட்டு அவித்தல் (2) ஸ்ரு செய்தல்
   (3) நீராவியில் அவித்தல் (4) அமுக்கத்தில் சமைத்தல்

6. மனித உடலில் நீர்ச்சமனிலையையும், அமிலகார சமனிலையையும் பேணுவதற்கு அவசியமான கனியுப்புத் தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) குளோரின், சோடியம் (2) சோடியம், மக்னீசியம்
   (3) சோடியம், பொற்றாசியம் (4) பொற்றாசியம், பொசுப்பரசு

Past Papers Wiki

7. உணவுச்சமிபாடு தொடர்பான மிகவும் பொருத்தமான உறுப்பையும் நொதியத்தையும் தெரிவு செய்க.
(1) முன்சிறுகுடல் - திரிச்சின் (2) இரைப்பை - தயலின்
(3) வாய் - இலிப்பேசு (4) சிறுகுடல் - பெப்சின்

8. உணவுச்சமிபாடு தொடர்பான **சரியான** கூற்றை தெரிவு செய்க.
(1) உணவை வெட்டுதல், அரைத்தல், விழுங்குதல் போன்ற சமிபாட்டு செயற்பாடுகள், நடைபெறுவது இரசாயனச் செயற்பாடாகும்.
(2) புரதச்சமிபாடு வாய்க்குழியில் ஆரம்பமாகி சிறுகுடலில் முடிவடையும்.
(3) உணவில் அடங்கும் போசணையின் ஒரு பகுதி பெருங்குடலினால் அகத்துறிஞ்சப்படும்.
(4) நீர், கனியுப்பு, விற்றமின் சில மருந்து வகைகளும் அகத்துறிஞ்சப்படுவது பெருங்குடலின் தொழிற்பாடாகும்.

9. உணவுத்திட்டமிடலின் போது போசணைக் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக உணவுத் தெரிவுக்கு வழிகாட்டும் மூலாதாரம்
(1) போசணை அட்டவணை (2) உணவுக் கூம்பகம்
(3) நாளாந்த போசணைத்தேவை அட்டவணை (4) உணவுத் தொகுதி

10. விற்றமின் D இன் இரசாயனப் பெயர்
(1) கோலிகல்சிப்பெரோல் (2) டொக்கோபெகரால் (3) ரெற்றினோல் (4) நப்தகுவினொல்

11. விலங்குணவுகளில் மட்டும் அடங்கியுள்ள B தொகுதி விற்றமின் ஆனது
(1) விற்றமின் B_1 (2) விற்றமின் B_2 (3) விற்றமின் B_6 (4) விற்றமின் B_{12}

12. மரக்கறிகளில் காணப்படும் இயற்கையான மஞ்சள், சிவப்பு என இனங்காணும் நிறங்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
(1) அந்தோசயனின், கரட்டினோயிட் (2) கரட்டினோயிட், பிளேலோலைட்
(2) கரட்டினோயிட், அந்தோசயனின் (4) குளோரோபில், பிளேலோலைட்

13. சோட்க்ரஸ்ட் பேஸ்ரி தயாரிக்கும் போது கோதுமை மாவும், மாஜரினையும் சேர்க்கும் விகிதமானது,
(1) 2:1 (2) 2:2 (3) 3:1 (4) 3:2

14. பாலைக்காச்சும் போதும் முட்டை ஒம்லட் தயாரிக்கும் போதும் வெப்பஇடமாறும் முறைகளை ஒழுங்கு முறைக்கேற்ப குறிப்பிடுக,
(1) கடத்தல், கதிர்ப்பு (2) மேற்காவுகை, கடத்தல்
(3) மேற்காவுகை, கதிர்ப்பு (4) கதிர்ப்பு, கடத்தல்

15. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் **தவறான** கூற்றக்களைத் தெரிவு செய்க.
(1) உணவு பரிமாறும் போது தந்தையும் தாயும் மேசையின் இருபக்கமும் அமர்தல் வேண்டும்.
(2) உணவுத்தட்டுக்களில் உணவு பரிமாறும் போது கைகழுவும் கோப்பையையும், கைத்துடைப்பமும் வேறு ஒரு தட்டில் வைக்கவும்.
(3) மேலைத்தேய கலாச்சாரத்துக்கு ஏற்ப ஒரு நபருக்கு உணவு உண்பதற்கு 20 × 22 அளவுடைய இடத்தை ஒதுக்குதல்.
(4) உணவு பரிமாறுதல் வலது பக்கத்தினாலும், பாத்திரங்களை இடது பக்கத்தினாலும் அகற்றுதல் வேண்டும்.

16. நுண்ணங்கி விருத்திக்கு தேவையான புறக்காரணிகளாவன,
(1) pH பெறுமானம் (2) நீர்ச்செயற்பாடு (3) ஒட்சிசன் (4) வளர்ப்பு ஊடகம்

17. போசணைக் குறைபாட்டின் அறிகுறிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. முரசு வீங்குதல்
B. இதய துடிப்பு அதிகரித்தல்
C. முரசில் இருந்து குருதி வடிதல்
D. பார்வைத் தெளிவின்மை
இவற்றுள் விற்றமின C குறைபாட்டு அறிகுறிகள் **மட்டும்** காட்டுவது
(1) A, B (2) A, C (3) B, C (4) B, D

18. உலக சுகாதார ஸ்தாபனத்தின் படி கட்டிளமைப் பருவத்தினரின் வயதெல்லையானது,
(1) 10–17 வயது (2) 10–19 வயது (3) 10–20 வயது (4) 10 – 24 வயது

19. பெண்பிள்ளையின் உடலினுள் சூல் முட்டை உருவாகுவது,
(1) பூப்படைதலின் ஆரம்பக் கட்டம் (2) பின்கட்டிளமைப்பருவம்
(3) பிறப்பதற்கு முன் (4) பூப்படையும் காலம்

20. கட்டிளமைப்பருவம் தொடர்பான **சரியான** கூற்று பின்வருவனவற்றில் எது?
(1) உடல் விருத்திக்கும், உளவிருத்திக்கும் தொடர்புள்ளது.
(2) பரம்பரையும் சுற்றுச் சூழலும் சமூகத் தன்மையை பெரிதும் பாதிக்கின்றது.
(3) இப்பருவத்தில் பெண்பிள்ளைகளின் தசைநார் வளர்ச்சியும், ஆண்பிள்ளைகளின் கொழுப்புத் திசுக்களின் வளர்ச்சியும் விருத்தியடையும்.
(4) இப் பருவத்து பிள்ளைகள் தமது சுயகருத்துக்களை தெரிவிப்பதற்கு முயற்சிப்பார்.

21. கட்டிளமைப்பருவப் பிள்ளைகளின் அசாதாரண நடத்தைக் கோலம்
(1) வீரவணக்கம் (2) கோபவேசம் (3) பகற்கனவு (4) தாழ்வு மனப்பாங்கு

22. கருக்கட்டிய சூல் பிரிகையடைந்து கருப்பைச்சுவரில் **உட்பதிக்கும்** இடத்தினை எவ்வாறு அழைப்பார்
(1) பரவல் (2) கருக்கட்டல் (3) என்ரோமெற்றியம் (4) வளர்ச்சியடைதல்

23. கட்டிளமைப் பருவத்தின் **உடல்விருத்தியில்** அவதானிக்கக் கூடியது,
(1) உடல் வளர்ச்சியின் வேகம் அதிகரிக்கும் (2) உடல் எடை அதிகரிக்கும்
(3) எலும்புகளில் கல்சியம் அதிகரிக்கும் (4) கை, கால்களை விட உடல் வேகமாக வளரும்.

24. மாதவிடாய் சக்கரத்தில் கருவளக் காலமானது,
(1) மாதவிடாய்ச்சக்கரத்தின் 1 – 5 ஆம் நாள் வரை
(2) மாதவிடாய்ச்சக்கரத்தின் 7 – 14 ஆம் நாள் வரை
(3) மாதவிடாய்ச்சக்கரத்தின் 7 – 28 ஆம் நாள் வரை
(4) மாதவிடாய்ச்சக்கரத்தின் 7 – 21 ஆம் நாள்வரை

25. புதிதாக பிறந்த குழந்தையில் காணப்படாத இயல்பானது,
(1) உடலிப் கொழுப்பு படலம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.
(2) தெறிவினைச் செயற்பாடுகளை பிரதிபலிக்கும்
(3) தோல் மெல்லிய உரோமங்களால் காணப்படும்.
(4) தலை உடலின் நீளத்தின் ¼ பங்காக இருக்கும்.

26. குழந்தைகளுக்கு JE தடுப்பூசி (யப்பானிய என்சைபலயிடிஸ்) எவ்வயது பூர்த்தியாகும் போது வழங்கப்படும்.
(1) 6 மாதம் (2) 9 மாதம் (3) 12 மாதமுடிவில் (4) 18 மாதமுடிவில்

27. ஒரு வருடத்தில் குழந்தை வெளிப்படுத்தும் உள சிந்தனை **அல்லாதது**.
(1) உடனடியானது (2) தீவிரமாக (3) நிலையானது (4) விரைவில்மாறக் கூடியது

28. நென்சுக் துணி உற்பத்தியின் அடிப்படையானது,
(1) பட்டுநார் (2) இலினன்நார் (3) பருத்திநார் (4) கம்பளிநார்

29. பருத்தி நாரை எரிக்கும் போது
(1) பொலித்தீன் எரிக்கும் மணம் உண்டாகும். (2) கடதாசி எரிக்கும் மணம் உண்டாகும்
(3) மயிர் எரியும் மணம் உண்டாகும். (4) தார் எரியும் மணம் உண்டாகும்.

30. உடல்வடிவத்தை எடுப்பாக காட்டுவதற்காக பயன்படுத்தக் கூடிய தையல்நுட்ப முறையானது,
(1) வேல்மடிப்பு (2) ஒடுக்கமடிப்பு (3) நுண்ணியஒடுக்கமடிப்பு (4) மடிப்புகள்

31.



இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள அலங்காரத் தையலை தைப்தற்கு மிகவும் பொருத்தமான துணியானது,

(1) வோயில், எயர்டெக்ஸ், பொப்லின் (2) கன்வஸ், வொயில், அய்டா
(3) அய்டா, ஜாவா, கென்வஸ் (4) பொப்லின், ஜாவா, அய்டா

32. திறப்புகளை மூடுவதற்கான தெறியினைத் தைக்கும் முறை
(1) ஆடையின் கீழ்விளிம்பில் உள்ள மடிப்பிலாகும்.
(2) ஆடையின் திறப்பின் மேல் மடிப்பிலாகும்.
(3) ஆடை திறப்பின் வலது பக்கத்தில்.
(4) ஆடை திறப்பின் கீழ் , மேல் இருபக்கமும்.

33. முன்பிள்ளைச் சட்டையின் மேற்பகுதியின் உள்பக்கத்தினை சரியான முறையில் தைத்து முடிக்க பயன்படுத்தும் முறையானது
(1) குவில்ட் (2) சரிவுத்துண்டு பிடித்தல் (3) கம்பளித்தையல் தைத்தல் (4) அணையிடல்

34. பின்வருவனவற்றின் **சரியான** விடையை தெரிவு செய்க.
(1) பிள்ளை ஆடையின் கழுத்து, விளிம்புகளை அலங்காரம் செய்வதற்கு வெட்டுக்குத்து தையல் பயன்படுத்தப்படும்
(2) ஆடைக்கான மாதிரியுரு தயாரிக்கும் போது நீளத்தினை காட்டுவதற்கு அம்புக்குறி பயன்படுத்தப்படும்
(3) பிள்ளை ஆடையின் தோள் மூட்டை பொருத்துவதற்கு பிரன்சிய பொருத்து தைக்கலாம்
(4) வேல்கோட்டேப், றிபன், எம்ரோய்டரி சட்டம் தையலுக்கு அவசியமான கருவிகளாக பெயரிடப்பட்டுள்ளது.

35. இவ் உருவில் குழந்தை ஆடைக்கான கைக்குழைசடியை காட்டுகின்றது.
H, S கைக்குழைச்சடியின் உயரத்தை காட்டுகின்றது. இதன் உயரமானது



(1) 6cm (2) 7cm (3) 8cm (4) 10cm

36. வீட்டுத்தோட்டத்தை அலங்கரிப்பது தொடர்பான குளங்கள், நீர்வீழ்ச்சிகளை அமைப்பதன் மூலம்
(1) விகிதசமம் (2) ஒத்திசைவு (3) உறுத்தல் இசைவு (4) சந்தம்

37. நிறச்சக்கரத்தில் பச்சையுடன் நீலமும், செம்மஞ்சலுடன் மஞ்சலும் சேர்ப்பதனால் உருவாகும் வர்ணங்கள் முறையே
(1) பச்சைநீலம், செம்மஞ்சள் (2) நீலப்பச்சை, மஞ்சள்செம்மஞ்சள்
(3) மஞ்சள்பச்சை, சிவப்புஊதா (4) பச்சைமஞ்சள், செம்மஞ்சள்சிவப்பு

38. உழைப்புபகிர்வு அட்டவணை தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய விடயம் **அல்லாதது**
(1) குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை
(2) குடும்ப உறுப்பினர்கள் கொண்டிருக்கும் பல்வேறு திறன்கள்
(3) குடும்பத்துக்கு கிடைக்கும் மொத்த வருமாத்தின் அளவு
(4) குடும்ப அங்கத்தவர்களின் வயது மட்டம்

39. மனைவளங்களில் மனிதவளம் மட்டும் கொண்டிருக்கும் தொகுதியானது
(1) அறிவு, மனப்பாங்கு, பணம், உழைப்பு (2) அறிவு, திறன், சமூகவசதி, மனப்பாங்கு
(3) உழைப்பு, திறன், சொத்து, மனப்பாங்கு (4) அறிவு, திறன், சிரமம், மனப்பாங்கு

40. முகாமைத்துவ செயன்முறையின் முதலாவது செயன்முறையானது
(1) ஒழுங்கமைத்தல் (2) திட்டமிடல் (3) மதிப்பிடல் (4) செயற்படல்

கல்வி உயர் கல்வி தொழில்கல்விஅமைச்சு
தொழில்நுட்பபிரிவு
க.பொ.த (சா.தரம்) மாதிரி வினாத்தாள் 2026

மனைப்பொருளியல்	85	T	II

- **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.
- முதலாம் வினாவுக்கு **20 புள்ளிகளும்** ஏனைய வினாக்களுக்கு **10 புள்ளிகளும்** வழங்கப்படும்

1. கீழே தரப்பட்டுள்ள சம்பவத்தை ஆராய்ந்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

குடும்பத்தின் மூத்த மகளான வாசனா 11ஆம் தரத்தில் கல்வி கற்கின்றாள். அவளுடைய தந்தை தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்வதோடு, தாய் முன்பள்ளி ஆசிரியராக கடமை புரிவதுடன் வீட்டு வேலைகளையும் சிறப்பாக நிர்வகிக்கின்றார். வாசனாவின் சகோதரி தரம் 10 இல் கல்வி கற்கின்றாள். பாடசாலையில் திட்டமிடப்பட்டுள்ள மனையியல் பாட கண்காட்சிக்கான ஏற்பாடுகளை மனைப்பொருளியல் ஆசிரியர் மூலம் வாசனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆசிரியரின் ஆலோசனைக்கமைய மனைப்பொருளியலின் நான்கு பிரிவுகளை பிரித்து அதற்கேற்ப மாணவர் குழுவிடம் வழங்கி கண்காட்சி சிறப்பாக நடைபெற வாசனா முன்வந்தார்.

i. சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட மகள்களின் போசணைத்தேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
ii. கண்காட்சிக்காக பானங்கள் வழங்க முன்வரும் போது பழப்பானம் தயாரிக்கும் செயற்பாடுகளின் படிமுறைகள் **நான்கு** குறிப்பிடுக
iii. கண்காட்சியில் முன்வைத்த பாலும் பால் சார்ந்த உணவுகளில் பொதுவாக உள்ளடங்கும் நுண்போசணைகள் **இரண்டு** எழுதுக.
iv. முன்பள்ளி பிள்ளைகளுக்கான உணவைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயம் **இரண்டினைக்** குறிப்பிடுக.
v. கண்காட்சியில் முன்வைக்கப்பட்ட தழுவணை உறையின் திறப்புக்களை மூடுவதற்காக பயன்படுத்திய **இரண்டு** முறைகளை எழுதுக.
vi. முன்வைக்கப்பட்ட அலங்காரத் தையல்கள் அடங்கிய புத்தகத்தில் உள்ள மீன்முள்ளுத் தையலை வரைந்து காட்டுக.
vii. யௌவனப்பருவத்தினரின் உடல் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
viii. ஐந்து வயது பூர்த்தியாகும் பிள்ளைக்கு வழங்கப்படும் தடுப்பூசி வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.
ix. வீட்டு வேலையை முறையாக செய்து முடிப்பதற்கு நேர அட்டவணை திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் **இரண்டினை** குறிப்பிடுக.
x. சம்பவத்தில் குறிப்பிட்ட குடும்ப வகையினைப் பெயரிட்டு அதன் நன்மைகள் **இரண்டினை** எழுதுக..
(02x10 = 20 புள்ளிகள்)

2. i. புடவை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தாவர நார்களுக்கும், பாதித்தொகுப்பு நார்களும் **மூன்று** உதாரணங்கள் தருக. (03 புள்ளிகள்)
ii. ஆடைகளுக்கு பயன்படுத்தப்படும் பொருத்துக்களில் நல்ல பக்கம் வெளியே தெரியாத பொருத்தின் பெயரை இட்டு அதன் பிழைப்பக்கத்தை வரைந்து காட்டுக. (03 புள்ளிகள்)
iii. முன் பிள்ளைப்பருவ பெண்பிள்ளைகான சட்டையின் உடல்பகுதியை தைப்பதற்கு பின்பற்றப்படும் படி முறையைகளைத் தருக (04 புள்ளிகள்)
(முழுப்புள்ளி - 10)

3. i. புரதபூரணப்படுத்தலை விளக்கி உதாரணம் இரண்டைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
ii. குடும்பத்துக்கான நாளாந்த உணவு வேளையைதிட்டமிடுவதன் முக்கியத்துவத்தினை விளக்குக.. (03 புள்ளிகள்)
iii. (a) பகல் உணவு வேளையில் மரக்கறிச்சலாதை சேர்ப்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)
(b) உணவின் சமிபாட்டினை பாதிக்கும் இரண்டு காரணிகளை குறிப்பிடுக (02 புள்ளிகள்)
(முழுப்புள்ளி 10)

4. i. உணவு தெரிவு செய்யும் போது உணவின் தரப்பண்பை பேணுவதில் ஏற்படும் சிரமங்கள் **மூன்று** எழுதுக. (03 புள்ளிகள்)
ii. உணவு பழுதடைதலுக்கான உயிரியல் காரணங்களைக் பெயரிட்டு. ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் எழுதுக. (03 புள்ளிகள்)
iii. (a) மரக்கறிகளையும் பழங்களை நற்காப்பு செய்யும் முறைகளில் சட்னி தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் நற்காப்புப் பதார்த்தங்கள் ஆவன. (02 புள்ளிகள்)
(b) நற்காப்பு முறைகள் பயன்படுத்தக் கூடிய கோட்பாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(முழுப்புள்ளி - 10)

5. i. உங்கள் குடும்பம்பத்தால் சமூகத்துக்கு நிறைவேற்ற வேண்டிய **மூன்று** கடமைகளை எழுதுக. (03 புள்ளிகள்)
ii. மனையைக் கட்டுவதற்காக நிலத்தை தெரிவு செய்யும் போது உள்ளூராட்சி மன்றத்தினுடாக வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
iii. கலையின் அடிப்படை அம்சமான ‘‘இழையமைப்பு’’ பற்றி குறிப்பெழுதுக. (04 புள்ளிகள்)
(முழுப்புள்ளி - 10)

6. i. சிசு பருவத்தின் தெறிவினைச் செயற்பாடுகளை வெளிப்படுத்துவார்.
(a) ‘‘தெறிவினைச் செயற்பாடுகள்’’ விளக்குக. (02 புள்ளிகள்)
(b) ‘‘தெறிவினைச் செயற்பாடு’’ தொடர்பான உதாரணங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)
ii. முதல் வருடத்தில் குழந்தையைச் சமூகத்துடன் இணைக்க பெற்றோர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)
iii. குழந்தை விருத்தியின் இரண்டு முறைகளைக் குறிப்பிட்டு உதாரணங்கள் இரண்டு வீதம் எழுதுக. (04 புள்ளிகள்)
(முழுப்புள்ளி - 10)

7. i. பாலியல் தொடர்புகள் மூலம் கடத்தப்படும் **மூன்று** நோய்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)
ii. கட்டிளமைப் பருவப்பிள்ளையின் உளவிருத்தி வளர்ச்சியை பிரதிபலிக்கும் **மூன்று** பண்புகளை எழுதுக. (03 புள்ளிகள்)
iii. கட்டிளமைப் பருவ பிள்ளைகளின் வளர்ச்சியில் சமவயதுக்குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இக் கூற்றை ஏற்க கூடிய **நான்கு** விடயங்களை முன்வைக்குக. (04 புள்ளிகள்)
(முழுப்புள்ளி - 10)

கல்வி அமைச்சு
தொழில் நுட்பபிரிவு இசுருபாய பத்திரமுல்ல
க.பொ.த சாதாரணதரம் - 2026
85. மனைப்பொருளியல்
விடைகள்

பகுதி – 1

வினா	விடை	வினா	விடை	வினா	விடை	வினா	விடை
1.	2	11.	4	21.	1	31.	3
2.	1	12.	3	22.	3	32.	2
3.	3	13.	1	23.	2	33.	4
4.	4	14.	2	24.	3	34.	2
5.	2	15.	4	25.	1	35.	4
6.	3	16.	3	26.	2	36.	1
7.	1	17.	2	27.	3	37.	2
8.	4	18.	4	28.	3	38.	3
9.	1	19.	3	29.	2	39.	4
10.	1	20.	4	30.	1	40.	2

(புள்ளி 1×40=40)

பகுதி - 2

1.

I. சக்தி தேவை, புரத தேவை, கல்சியம், இரும்பு, நாகம், விற்றமின் B தொகுதி.

II. தயாரிக்கும் செயற்பாடுகள்

- சுத்தம் செய்தல்
- சுவையூட்டல்
- கழுவுதல்
- கலக்குதல்/கலத்தல்
- வெட்டுதல்

III. விற்றமின் B_2, விற்றமின் A, கல்சியம், பொசுபரசு.

IV.

- சிறிய உணவுவேளைகள் சிலவற்றை வழங்கல்
- உணவு வேளைகள் பல்வகைத்தன்மை
- சுவைத்தன்மையை அதிகரிக்கும் உணவுகளை சேர்த்தல் உப்பு, சீனி பாவித்தலை குறைத்தல்

V.

- நெறியும் நெறியோடை தைத்தல்
- இணைப்பி இணைத்தல்
- அமுக்குத் தெறி பிடித்தல்
- வெல்கோ நாடா பிடித்தல்

VI. சரியான முறையில் மீன் முள்ளுத் தையல் வரைந்து காட்டுக.



VII.

- கை, கால்கள் உடலை விட வேகமாக வளர்தல்
- உடலுறுப்புக்களின் அளவு சீரற்றதாகக் காணப்படுதல்
- பிள்ளைத் தோற்றம் படிப்படியாக மாற்றமடைந்து வளர்ந்தோருக்கான தோற்றம் ஏற்படும்
- எலும்புகளின் அடர்த்தி அதிகரிக்கும்
- பெண்களின் கொழுப்புத் திசுக்களின் விருத்தி துரிதமடைவதுடன் ஆண்களின் தசை நார்களின் வளர்ச்சியும் துரிதமடையும்

VIII.

- தொண்டைக் கரப்பான் டெட்டனஸ் இருகூட்டு வக்சீன் (DT)
- போலியோ வாய்மூலம் ஐந்தாவது சொட்டு.

IX.

- மனைச் செயற்பாடுகளின் போது தேவைக்கேற்ப முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவற்றைத் தீர்மானித்து நேரத்தை ஒதுக்கல்
- மனைச் செயற்பாடுகளுக்காக குடும்ப அங்கத்தவர்கள் ஈடுபடக்கூடிய நேரம் தொடர்பாகக் கவனம் செலுத்தல்
- மனையின் வேலைப்பழு கூடிய நேரங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தல்
- குடும்ப அங்கத்தவர்களின் தொகையையும் அவர்களின் தன்மையும் கருத்திற் கொள்ளல்
- குடும்ப அங்கத்தவர் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படக்கூடிய நேரம் தொடர்பாகக் குறித்தல்

X. கருக்குடும்பம்

- பரம்பரைக்கிடையிலான பிரச்சனைக் குறைதல்
- சுயாதீனம், தனித்துவம்
- தனித்துவம் சுயநலம் காணப்படல்
- தனியுரிமை பாதுகாப்பு
- பாதுகாப்பு தொடர்பான பிரச்சனை

(2×10=20 புள்ளிகள்)

2.

i. தாவர நார்கள் - பருத்தி, இலினன், சணல், ஆளி, றெமி

(விடயம் மற்றும் 2 உதாரணம் 1 ½)

பாதித் தொகுப்பு நார் - விசுகோசுறெயோன், கியுப்ரா அமோனியம் றெயோன், செலுலோசு அசிடேட்றெயோன், நைத்ரோ றெயோன்

(விடயம் மற்றும் 2 உதாரணம் 1 ½

(3 புள்ளிகள்)

ii. பிரான்சியப் பொருத்து:



(பெயரிடல் - 1 புள்ளி படம் - 2 புள்ளி மொத்தம் 3)

iii. அளவுகள் எடுத்தல்

↓

அவ் அளவுகளைக் கணித்தல்

↓

கணித்த அளவுகளைப் பயன்படுத்தி மாதிரியுருவை உருவாக்கல்

↓

துணி தெரிவு செய்தல்

↓

மாதிரியுருப் பயன்படுத்தி ஆடையை வெட்டுதல்

↓

ஆடையைத் தைத்தல்

↓

பொருத்தமான அலங்கார முறையினால் அலங்கரித்துப் பூர்த்தி செய்தல் (4விடயம் 4 புள்ளி)

PAST PAPERS WIKI

3.

i. தானியங்களையும் பருப்பு வகைகளையும் உணவுடன் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலுக்குத் தேவையான அத்தியாவசிய அமினோ அமிலம் கிடைக்கின்றது. இதனைப் புரதப் பூரணப்படுத்தல் எனப்படும்.
உணவுகள்:- பயறு கலந்த பாற்சோறு, கிச்சடி சாதம் போன்ற பருப்பு கலந்த உணவு.
(விளக்கம் புள்ளி 01, இரண்டு உணவு 01 புள்ளி)

ii. நாளாந்த உணவைத் திட்டமிடுவதன் முக்கியத்துவம்,

- குடும்ப அங்கத்தவர்களின் பல்வேறு போசணைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல்
- குடும்ப அங்கத்தவர்களின் விருப்பங்களையும் வெறுப்புக்களையும் அறிந்து அதற்கேற்ப உணவைத் திட்டமிடல்
- குடும்ப வருமானத்திற்கு ஏற்றவாறு உணவைத் திட்டமிடல் முடியுமாகுதல்
- பல்வகைமையுடனான உணவு வேளை திட்டமிடல்
- மூலப்பொருட்களையும், பல்வேறு வகையான பொருட்களையும் எளிதில் பெற்றுக்கொள்ளும் வசதிக்கேற்ப திட்டமிடல்
- நேரத்தை நிர்வகிக்கக் கூடியதாக அமைதல் (3 விடயம் 3 புள்ளி)

iii. a.

- உணவுவேளையில் விருப்பத்தை ஏற்படுத்தல்
- இழையமைப்பு, நிறம், சுவை பல்வகைமையைப் பெறல்
- விற்றமின் A, C யும் இரும்பு நுண்கனியுப்புக்களைப் பெறல்
- மலச்சிக்கலைத் தடுத்தல்
- உணவில் போதுமான நார்ச்சத்துக்களைப் பெறல்
- மாச்சத்து நிறைந்த உணவுகளின் அளவைக் குறைக்க உதவுதல்
- ஒட்சியேற்ற எதிரியாக இருத்தல் (2 விடயம் 2 புள்ளி)

b.

- விருப்பத்தை ஏற்படுத்தும் காரணிகள்
- பொறிமுறைக் காரணி / பௌதிகக் காரணிகள்
- இரசாயனக் காரணிகள் (2 விடயம் 2 புள்ளி)

4.

i.

- விற்பனையாளரின் கவனயீனம்
- பொருளாதாரப் பிரச்சினை
- உணவு தரமற்றதாக அமைதல்
- நுகர்வோரின் அறிவீனம் (3 விடயம் 3 புள்ளி)

ii.

- நுண்ணங்கிகள்: பூஞ்சணம் / பங்கசு, மதுவம், பற்றீரியா
- வேறு உயிர்கள்: நீள்மூஞ்சுவண்டு, அந்துப்பூச்சி, புழு, எலி, கூட்டுப் புழுக்கள்
(பெயரிடல் 2 புள்ளி உதாரணம் 1 புள்ளி)

iii. a. சீனி, உப்பு, வினாகிரி (2 புள்ளி)

b. நீரின் செயற்பாடு குறைத்தல் / புறப்பரவூட்டம் நிகழ்தல் மூலம் நுண்ணுயிர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
அமில ஊடகத்தின் மூலம் நுண்ணுயிர்கள் விருத்தியைக் கட்டுப்படுத்தல் (2 புள்ளி)

Past Papers Wiki

5.

i.

- உடல்ரீதியாகவும் உளரீதியாகவும், மனவெளிச்சி ரீதியாகவும், சமூகரீதியாகவும் விருத்தியடைந்த சமச்சீரான ஆளுமை கொண்ட பிள்ளையை சமூதாயத்துக்கு வழங்குதல்.
- அயல்வீட்டார், உறவினர்வினர்களின் தேவைகளுக்கும் பொது விவகாரங்களிலும் உதவி செய்து தமது பணியை அல்லது தொழிலை நேர்மையுடனும், தனது முழுத்திறமையுடனும் ஆற்றுதல்
- சமூகத்திற்கும் முழுச்சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் சத்தங்களை (வானொலி) உருவாக்கக் கூடாது
- தமது தோட்டத்துக் குப்பை கழிவுநீரை முறையாக அகற்றுதல்

(சரியான விடைக்கு மாணவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்)
(மூன்று விடயங்களுக்கு 3 புள்ளி)

ii.

- குழாய்நீர்
- மின்சார சக்தி
- பொதுபோக்குவரத்து
- கழிவுப்பொருட்களை அகற்றுதல்
- சுகாரசேவை
- சமூகத்தொடர்புகளை உருவாக்குதல் (விளையாட்டு, மைதானம், சனசமூகநிலையம், பல்வேறு சங்கங்கள்)
- மழைநீர்வழிந்தோடக் கூடிய முறைகள் பற்றிய விடயங்கள்

iii.

- ஒருமேற்பரப்பைத் தொடும் போது ஏற்படும் உணர்வு அதன் இழையமைப்பு என்று அழைக்கப்படும்.
- ஏற்கனவே தொட்டுணர்ந்த அனுபவங்களினுடாக மேற்பரப்பை பார்ப்பதனூடாகவே இழையமைப்பை உணரலாம்.
- வீட்டினுள், வீட்டுப்பொருட்கள், மென்மையான, வழுவழுப்பான, சொரசொரப்பான, வண்மையான போன்ற பல்வேறு மேற்பரப்புக்களின் தன்மையை விபரிக்கும் போது நீங்கள் அதன் அமைப்பைப்பற்றிப் பின்வருமாறு கருத்து தெரிவிக்கலாம்.
- வீட்டின் பல்வேறு இடங்களின் பாகங்கள் (சுவர், தரை, கூரை, கதவு, யன்னல் போன்ற) அத்துடன் எந்தவொரு பொருளுக்கும் (கதிரை, சோபாக்கள், சாப்பாட்டு மேசை, கதிரைகள், கட்டில்விரிப்புக்கள் போன்றவை) வெவ்வேறுவிதமான இழையமைப்பை மேற்கொள்வதனால் அலங்காரத்தை மேம்படுத்தலாம்
- இங்கு சுவர்கள், தரை, மனைத்தளபாடங்களுக்கு இழையமைப்புக்கள் பொருத்தமாக அமைவது மிகவும் முக்கியமானது. (4 விடயங்களுக்கு 4 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளி)

6.

i. a. மூளையின் கட்டுப்பாடின்றி (உணர்வுகளுக்கு) வெளிக்காட்டும் செயற்பாடுகள் எளிய தெறிவினைச் செயற்பாடுகள் ஆகும். (தானாக இடம்பெறும் செயற்பாடுகள்) (01 புள்ளி)

b. அழுதல், ஒளிவெளிச்சம்பட்டதும் கண்களை மூடிக்கொள்ளல், திடுக்கிதல், பாலை உறிஞ்சிக்குடித்தல், தொடுதல், மலம்கழித்தல் (02 புள்ளி)

ii.

- சிறுகுழந்தைக்கு துணையாக இருத்தல்
- குழந்தையுடன் எப்போதும் கதைத்தல்
- குழந்தையுடன் விளையாடுதல்
- உறவினர்கள் நண்பர்களுடன் குழந்தை வெளியே செல்லுதல் (3 விடயம் 03 புள்ளி)

iii.

- தலையில் இருந்து கால் பாதம் வரை
- மத்திய பகுதியில் இருந்து கால்வரை (2 விடயம் 02 புள்ளி)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- <u>தலையில் இருந்து கால் பாதம் வரை</u>

அசையும் பொருள் பக்கம் பாரத்தல்
கழுத்தை உயர்த்துதல் (1/2 × 2 = 01 புள்ளி)

- <u>மத்திய பகுதியில் இருந்து கால்வரை</u>

குப்புற இருக்கும் போது நெஞ்சையை உயர்த்துதல்
விரல்நுனிகளால் பொருட்களை எடுத்தல் (1/2 × 2 = 01 புள்ளி)

(முழுப்புள்ளி 10)

7.

i.

- ஹோர்பீஸ்
- சிபிலிசு
- கொணோரியா(வெள்ளைபடுதல்)
- க்ளமீடியா
- வெள்ளைபடுதல் அற்ற சிறுநீர்குழாய் அழற்சி
- ட்ரைகொ மொனயசீஸ் தொற்று
- HIV / AIDS
- பாலுறுப்பு உண்ணிகள் (3விடயம் 3 புள்ளி)

ii.

- பிரச்சனை தீர்க்கும் திறன்
- தர்க்கரீதியான சிந்தனை
- ஆக்கத்திறன்
- முரன்பாடற்ற தெளிவான கருத்துக்களை வெளியிடும் திறன்
- முடிவெடுக்கும் திறன்
- தலைமைத்துவத்தை ஏற்கக்கூசுடிய ஆற்றல்
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செயல்படும் திறன்
- அவதானிக்கும் திறன் (கவனிக்கக்கூடிய தன்மை)
- நினைவாற்றல் திறன் (நினைவக திறன்)
- இனங்காணும் திறன் (அடையாளம் காணும் திறன்)
- இவை மனதின் வளச்சியை பிரதிபலிக்கும் பண்புகளாகும். (3விடயம் 3 புள்ளி)

iii.

- துலைமைத்துவத்தை ஏற்றல்
- நேகிழ்வுத் தன்மையை பிரதிபலித்தல்
- சுயநலமாக செயற்படும் திறனைப் பெறுகின்றார்
- கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளலாம்
- மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை படைப்பாற்றலுக்கு வழிவகுக்கின்றது.
- தன்னலப் போக்கில் இருந்து விடுபட்டு மற்றவர்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது
- அதனால் இளைமைப்பருவத்தின் முடிவில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருநடத்தை முறையை நிலைபெறுகிறது
- சமவயதுக்குழுக்களுடன் இணைவதன் மூலம் சமூகவளர்ச்சி ஏற்படுகின்றது
- குழுக்களாக செயல்படும் திறன் ஏற்படும். (4விடயம் 4 புள்ளி)

(முழுப்புள்ளி 10)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank